OS.No. : 04/2022 C/w 45/2023& 46/2023
நாள் :22.04.2025
பி.வா.சா. :3
பெயர் : ரகுராமன்

IA.No. 14/2025 & IA.No. 15/2025 என்ற மனுக்கள் அனுமதிக்கப்பட்டதன்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தான் என் வீட்டில் முதல் மகன் என்றாலும் அனைவருக்கும் மூத்தவன் என்றால் சரி. என் உடன்பிறந்த சகோதரர் தான் இந்த வழக்கின் வாதி சீத்தாராமன் என்றால் சரி. எனக்கு முத்துராமன் (4ம் பிரதிவாதி) என்ற இன்னொரு சகோதரரும் உண்டு என்றால் சரி. 08.01.2024 அன்று அவரை இந்த நீதிமன்றத்தில் விசாரித்தார்கள் என்றால் சரி. முத்துராமன் இந்த வாதிக்கு ஒரு சொத்தை செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. அவருக்கு ஒன்றும் தெரியாது. அவர் எழுதிக்கொடுக்கவில்லை. அவர் மனநலம் பாதிக்கப்பட்டதை பயன்படுத்தி அவரை அழைத்துபோய் சொத்தை எழுதிவாங்கி கொண்டார்கள். அவர் ஒரு குழந்தை போன்றவர். அவருக்கு ரோடு கூட கிராஸ் பண்ண தெரியாது. முத்துராமன் வாதி பெயரில் எழுதிக்கொடுத்த ஆவணத்தை வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த ஆவணத்தில் யார் யார் சாட்சிகையெழுத்து போட்டுள்ளார்கள் என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் என் அப்பாவும் வேறு யாரோ ஒருவரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். என் அப்பாவும் என் சித்தப்பாவும் சாட்சி கையெழுத்துபோட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா தான் அவர் குடும்பத்தில் கடைசி எனக்கு சித்தப்பா கிடையாது. அந்த ஆவணத்தில் சாட்சி கையெழுத்துபோட்ட

மற்றொருவர் யார் என்று எனக்கு தெரியாதா என்றால் ஆமாம். அந்த ஆவணம் ஏற்படும்போது என் அப்பா நல்ல மனநிலையில் இருந்தார் என்றால் சரி. என் அப்பா அந்த ஆவணம் ஏற்பட்ட பிறகு தன்னை ஏமாற்றிசாட்சி கையெழுத்து வாங்கிவிட்டார்கள் என்று சட்டப்படியான நடவடிக்கை எடுத்தாரா என்றால் இல்லை. அவரால் எடுக்கமுடியவில்லை. அவருக்கு பார்கின்சன் நோய் இருப்பதால் அவரால் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கமுடியவில்லை. பார்கின்சன் நோய் என்றால் என்ன என்றால் அதற்கு பெயர் நடுக்குவாதம். 14 வருடமாக அவருக்கு சிகிச்சை எடுத்தேன். அதனால் அவரால் எந்த ஒரு விஷயத்தையும் சுயமாக செய்யமுடியாது என்றால் ஆமாம். முத்துராமன் வாதிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தபிறகு என் அப்பா எனக்கோ என் மனைவிக்கோ செட்டில்மெண்ட் அல்லது கிரயம் எதுவும் எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை. என் அம்மாவிற்கு கல்யாண மண்டபத்தை செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்திருக்கிறார். அதற்கு முன்பு என் அப்பா எனக்கு கிரயமோ செட்டில்மெண்ட்டோ எழுதிக்கொடுத்திருக்கிறாரா என்றால் கிரயம் எழுதிக்கொடுத்திருக்கிறார். நான் வெளிநாட்டில் இருந்தபோது என் அப்பாவிற்கு பணம் அனுப்பினேன் அவருக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தேன். என்னுடைய பவர் ஏஜெண்ட் என்ற முறையில் நான் அனுப்பியபணத்தை வைத்து எனக்காக கிரயம் வாங்கினார். வாதி சீத்தாராமனும் என் அப்பாவிற்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதி என் அப்பாவிற்கு பவர் கொடுத்து அவரும் சில சொத்துக்களை இந்தியாவில் வாங்கியுள்ளார் என்றால் இருக்கலாம் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் வாதிக்கும் குடும்ப சொத்து சம்பந்தமாகத்தான் பிரச்சனை என்றால் சரியல்ல. என் பெயரில் கிரயம் பதிவு செய்யப்பட்ட

சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார். அது சம்பந்தமாகத்தான் பிரச்சனை. வாதி என் சொத்தை ஆக்கிரமிப்பு செய்து விட்டார் என்று அவர் மீது சிவில் வழக்கு எதுவும் கொடுத்து நிலுவையில் உள்ளதா என்றால் ஆமாம் 9 சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது. அதுபோல் குற்றவியல் வழக்கும் வாதி மீது நான் கொடுத்து நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம் 5 குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது. நான் என்னுடைய சொத்தை என் அப்பா மூலமாக பணம் அனுப்பி வாங்கியதாக சொல்வது இந்த வழக்கு சொத்துக்கள்தானே என்றால் ஆமாம். இந்த வழக்கு சொத்துக்களுக்காக இந்தந்த தேதியில் என் அப்பாவிற்கு இந்த வங்கி மூலம் பணம் அனுப்பி இந்த தேதியில் இந்தந்த வழக்கு சொத்து கிரயம் பெறப்பட்டது என்ற விவரத்தை என் எதிர்வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரி. அதற்கான பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளேன். அதில் அந்த விவரம் உள்ளது. எனக்கும் வாதிக்கும் 2016 ம் வருடத்தில் இருந்து பிரச்சனை. அதற்கு முன்பு எனக்கும் வாதிக்கும் சுமூகமான உறவுதான் என்றால் சரி. 2009 ம் வருடம் என் அப்பா வாதியின் வங்கி கணக்கிலிருந்து வாதியின் வங்கி காசோலையை பயன்படுத்தி 45 லட்சம் ரூபாய் பணம் எடுத்தார் என்றால் அதை நான் மறுக்கிறேன். என் அப்பாவின் காசோலையில் வாதி என் அப்பா கையெழுத்தை போட்டு 50 லட்சம் ரூபாய்க்கு அதை பூர்த்தி செய்து அதை வேறு ஒருவரிடம் கொடுத்து செக்கை பவுன்ஸ் செய்து என் அப்பா மீது குற்றவழக்கு போட்ட மனஉளைச்சலில் தான் என் அப்பா இறந்துவிட்டார். இந்த சம்பவம் நடந்த பிறகு வாதி மீது என் அப்பா கையெழுத்தை மோசடியாக போட்டு அவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவைத்ததாக நான் வாதி மீது குற்றவியல் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். அது இந்த நீதிமன்றத்தில்தான்

நிலுவையில் உள்ளது. அதுபோல் ஒரு குற்றவியல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது என் தம்பிக்கு 2009 ம் திருமணம் செய்து வைத்ததாகவும் திருமணத்தின்போது 52 லட்சம் ரூபாய்க்கு வீட்டை வாங்கிகொடுத்ததாகவும் சொல்லியுள்ள சங்கதி வழக்கிற்காக சொல்லப்பட்டுள்ள பொய் என்றால் சரியல்ல. என் அப்பாதான் அந்த வீட்டை வாங்கி கொடுத்தார். வாதி துபாய்க்கு வந்தாரா அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் வந்தார். அந்த சமயம் என் அம்மா துபாயில் இருந்தார். வாதிக்கு நான் துபாயில் எந்த வேலையும் நான் வாங்கி தரவில்லை என்றால் சரி. அவர் துபாய்க்கு வருவதாக இந்தியாவிற்கு திரும்ப போவதாக என்னிடம் சொல்லிவிட்டு சென்றாரா என்றால் இல்லை. அதற்கு அவசியமில்லை. நான் கேட்கவும் இல்லை. அதனால் அவர் துபாய்க்கு எதற்காக வந்தார் எப்போது வந்தார் என்ற விவரம் தெரியாமல் அவர் துபாயில் குற்ற நடவடிக்கையில் ஈடுபட்டதாக வழக்கிற்காக பொய்யான சங்கதியை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதியை பற்றி சொல்லியுள்ள சங்கதி உண்மையான சங்கதிதான். என் அப்பா 1980 ம் வருடம் வெளிநாட்டிற்கு போனார். 1980 முதல் 1998 வரை வெளிநாட்டில் இருந்தார். அந்த காலகட்டத்தில் என் அம்மாதான் எங்களை பார்த்துக்கொண்டார் என்றால் சரி. என் அம்மா இந்த நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணையின்போது தன் குழந்தைகளை தான் கஷ்டப்பட்டு மாடுகள் வளர்த்து பால் விற்பனை செய்து மற்றும் வீட்டு வேலைகள் செய்து அதன்மூலம் வரும் வருமானத்தில் நான் வளர்த்தேன் என்று சொல்லியுள்ளார் என்றால் சரி. அவர் வீட்டு வேலை என்று சொல்லியிருப்பது தன்னுடைய வீட்டுவேலைகளைத்தான். அப்படியிருக்கும்போது என் அப்பா வெளிநாட்டில் வேலை பார்த்து எங்களை வளர்த்ததாக சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. என்

அப்பா பணம் அனுப்பினார். என் அம்மா எங்களை வளர்த்தார். வாதி என்னுடைய வங்கி கணக்கில் பணம் போடவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா கல்யாண மண்டபம் சம்பந்தமாக உயில் ஒன்றை வாதிக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த கல்யாண மண்டபத்தை என் அம்மாவிற்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்திருக்கிறார் அது தெரியும். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை வாங்கி படித்துப் பார்த்திருக்கிறேனா என்றால் படித்துப்பார்த்திருக்கிறேன். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் அப்பா வாதிக்கு எழுதி வைத்த உயில் விவரம் சொல்லப்பட்டிருந்ததா என்றால் நான் அவ்வளவு கவனமாக படிக்கவில்லை. அந்த விவரமே தெரியாமல் என் அப்பா வாதிக்கு உயில் எழுதிவைத்ததாகவும் அதை ரத்து செய்ததாகவும் பொய்யான சங்கதியை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா உயில் எழுதி வைத்ததும் ரத்து செய்தததும் எனக்கு தெரியாது. அப்படி பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருந்தால் அது பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பாரா 14ல் சொல்லியுள்ள சங்கதிகள் குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ஆனால் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. என் மனைவியை இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் 2வது சாட்சியாக விசாரித்தது தெரியும் என்றால் சரி. என் மனைவி தனது சாட்சியத்தில் தன் மீது குற்றவழக்கு நிலுவையில் இருப்பதாக சொல்லியுள்ளார் என்றாலும் அது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் என் மனைவிக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. பிடியாணை ரத்து செய்யப்பட்டுவிட்டது. நான் எப்படி என் அப்பாவிற்கு பணம் அனுப்பி சொத்துகளை இந்தியாவில் வாங்கியிருக்கிறேனோ

அதேபோல் வாதியும் தனது அப்பாவிற்கு பணம் அனுப்பி வழக்கு சொத்துக்களை வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. அவர் இந்தியாவில் வேறு சொத்துக்கள் வாங்கியிருக்கலாம். அதைப்பற்றி எனக்கு தெரியாது. பிவாசா 5 முதல் 12, 23 கிரய ஆவணங்கள் எனது அப்பாவை முகவராக கொண்டு என் பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்து என்றிருக்கும்போது பிவாசா 13, 14, 15 கிரய ஆவணங்கள் பிரதிவாதி 1, 2 மற்றும் 4 ஆகியோரின் பெயரில் நேரடியாக கிரயம் பெற்றதற்கு எதவாது சிறப்பு காரணம் உண்டா என்றால் உண்டு. 1 ம் பிரதிவாதி என் அப்பா. 2 ம் பிரதிவாதி என் அம்மா. 4 ம் பிரதிவாதி என் முடியாத தம்பி முத்துராமன். அவர்களின் எதிர்கால நலனைக்காக அவர்கள் பெயரில் அந்த சொத்துக்களை கிரயம் வாங்கினேன். அந்த சொத்துக்கள் தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் என் அம்மா அப்பா பெயரில் இருந்த சொத்துக்களை என் பெயரில் மாற்றி கொடுத்துவிட்டார்கள். முத்துராமன் பெயரில் உள்ள சொத்து அப்படியே தான் உள்ளது. அரியலூர் மாவட்டம் T. பழுர், சார் பதிவாளர் அலுவலகத்தில் என் பெயரில் என் அம்மா ஒரு சொத்து எழுதி வைத்துள்ளார் என்றால் சரி. மயிலாடுதுறையில் உள்ள சொத்து குறித்து என் அம்மா அரியலூர் மாவட்டம் T. பழுர், சார் பதிவாளர் அலுவலகத்தில் என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதிவைக்க சிறப்பு காணரம் உள்ளதா என்றால் உள்ளது. மயிலாடுதுறையிலும் தரங்கம்பாடியிலும் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் அதிகார துஷ்பிரயோகம் உள்ளதால் இங்கு செட்டில்மெண்ட் பதிவு செய்யமுடியாது என்று சார்பதிவாளர் சொல்லிவிட்டார். அதனால் அரியலூர் மாவட்டம் T. பழுர், சார் பதிவாளர் அலுவலகத்தில் செட்டில்மெண்ட் பதிவு செய்தோம். நான் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் அரியலூர் மாவட்டம் T.

பழூர், சார் பதிவாளர் அலுவலகத்தில் செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றாலும், அதிகார துஷ்பிரயோகம் என்று நான் சொல்லியுள்ள காரணம் பொய்யான காரணம் என்றால் சரியல்ல. என் அம்மா பெயரில் நான் சொத்து வாங்கியதால் அதை என்னிடம் திருப்பி கொடுப்பதற்கா செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார். வழக்கு சொத்து அனைத்தும் வாதிக்கு தான் சொந்தம் என்றால் சரியல்ல. அது எனக்கு தான் சொந்தம். நான் தான் கிரயம் வாங்கினேன். சீத்தாராமன் இந்த வழக்கு சொத்தை வாங்கவில்லை என்றும் ரகுராமனாகிய நான் தான் கிரயம் வாங்கினேன் என்றும் நான் இதுவரை வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அது என்னுடைய சொத்து என் பெயரில் கிரயபத்திரம் உள்ளது நான் எதற்கு வழக்கு தாக்கல் செய்யவேண்டும். என்னுடைய சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். அதில் டாஸ்மாக் சாராயம் பதுக்கி வைத்துள்ளார்கள். வாதி வழக்கு சொத்துக்கள் அனைத்தையும் ஆக்கிரமிப்பு செய்துள்ளாரா என்றால் இல்லை. ஆசீர்வாத் திருமண மண்டபத்தை மட்டும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். மீதமுள்ள வழக்கு சொத்துக்கள் அனைத்தும் காலி மனை என்றால் இல்லை. நெல்விளையும் நிலங்கள் மற்றும் மனைகள். வழக்கு சொத்துக்கள் வாதிக்குத்தான் சொந்தம் என்றாலும் நான் வேண்டுமென்றே அதை மறைத்து மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

22/4/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை